**ஜனவரி – 01**

# TNPSC துளிகள்

- BEML லிமிடெட் நிறுவனமானது, நாட்டின் மிகப்பெரிய மற்றும் மிகவும் மேம்படுத்தப் பட்ட வகையிலான BD475-2 எனப்படும் மண் வெட்டு மற்றும் இழுவை இயந்திரத்தினை சமீபத்தில் அறிமுகப்படுத்தியுள்ளது.
- இந்தியப் பிரதமர், இந்திய அரசாங்கத்தின் ஆதரவுடன் கூடிய தமிழ் கற்பித்தல் என்ற திட்டத்தினை ஃபிஜி நாட்டில் தொடங்கி வைத்துள்ளார்.
- லடாக்கில் 14,300 அடி உயரத்தில் பாயும் பாங்காங் சோ ஏரியின் கரையில் அமைக்கப் பட்டுள்ள சத்ரபதி சிவாஜி மகாராஜா அவர்களின் சிலையினை இந்திய இராணுவம் திறந்து வைத்துள்ளது.
- மும்பையினைச் சேர்ந்த காம்யா கார்த்திகேயன் (17) ஏழு கண்டங்களிலும் உள்ள மிக உயரமான சிகரங்களை ஏறிய இளம் பெண் என்ற சாதனையைப் படைத்துள்ளார்.
- முகமூடி அணிந்த நடன முறைகள் மூலம் புத்தாண்டிற்கான அமைதி மற்றும் பெரும் செழுமையைக் கொண்டாடும் சிக்கிமின் காகியேட் நடன விழா ஆனது காங்டாக் நகரில் உள்ள சுக்லகாங் அரண்மனையில் நடைபெற்றது.
- தென் கொரியாவின் முவான் சர்வதேச விமான நிலையத்தில் ஜெஜு ஏர் நிறுவனத்தின் விமானம் ஆனது ஓடுபாதையில் விபத்துக்குள்ளானதில், அதில் பயணம் செய்த 181 பேரில் 179 பேர் உயிரிழந்தனர்.
- இந்திய இராணுவம் ஆனது, பாரத் எலக்ட்ரானிக்ஸ் லிமிடெட் (BEL) நிறுவனத்துடன் உடன் இணைந்து செயற்கை நுண்ணறிவுத் தொழில்நுட்பங்களின் மேம்பாடு மற்றும் ஏற்பினை விரைவுபடுத்துவதற்காக வேண்டி பெங்களூருவில் செயற்கை நுண்ணறிவு தொழில்துறை காப்பக மையத்தினை (IAAIC) நிறுவியுள்ளது.
- மும்பையின் இந்தியத் தொழில்நுட்பக் கல்விக் கழகமானது, ஓர் அதிர்வு அலை அடிப்படையிலான ஊசி இல்லாத ஒரு மருந்துப் பீச்சுக்குழாயினை உருவாக்கியுள்ளது என்ற நிலையில் இது தோலுக்கு மிகக் குறைவான சேதம் மற்றும் குறைவான நோய்த் தொற்று அபாயத்துடன் வலியற்ற மற்றும் பாதுகாப்பான மருந்து உட்செலுத்துதலை உறுதி செய்கிறது.
- 18வது யானைகள் மற்றும் சுற்றுலா விழாக்கள் ஆனது நேபாளத்தின் சௌராஹா எனுமிடத்தில் நடைபெற்றது.
- இந்தியாவில் உள்ள அமெரிக்கத் தூதரகம் ஆனது, 2024 ஆம் ஆண்டில் சுமார் ஒரு மில்லியனுக்கும் அதிகமான புலம்பெயர்ந்தோர் சாராத நுழைவு இசைவுச் சீட்டுகளை வழங்கியுள்ளது என்பதோடு இது தொடர்ந்து இரண்டாவது ஆண்டாக இந்த மைல் கல்லை எட்டியுள்ளதைக் குறிக்கிறது.

# தமிழ்நாடு செய்திகள்

## காமராஜர் துறைமுகத்தின் செயல்பாட்டுத் திறன்

- சென்னைத் துறைமுக அறக்கட்டளை மற்றும் அதன் துணை நிறுவனமான காமராஜர் துறைமுக லிமிடெட் ஆகியவை நடப்பு நிதியாண்டில் 100 மில்லியன் மெட்ரிக் டன் சரக்குப் போக்குவரத்து என்ற அளவினை தாண்டுவதை இலக்காக நிர்ணயித்துள்ளன.
- காமராஜர் துறைமுகம் ஆனது, 2022-23 ஆம் ஆண்டில் 43.51 மில்லியன் மெட்ரிக் டன் சரக்குகளைக் கையாண்டது.


- இது முந்தைய ஆண்டில் பதிவான 38.74 மில்லியன் மெட்ரிக் டன்னில் இருந்து 12.31 சதவீதம் அதிகமாகும்.
- காமராஜர் துறைமுகம் ஆனது 2021-22 ஆம் ஆண்டில் 1,35,702 அலகுகளை ஏற்றுமதி செய்துள்ள நிலையில், 2022-23 ஆம் ஆண்டில் 1,48,307 அலகுகளை ஏற்றுமதி செய்து உள்ளது.
- இந்தத் துறைமுகத்தின் நிதி சார் செயல்பாடு 1,000 கோடி ரூபாயைத் தாண்டி அதன் வருமானம் 1,002.45 கோடி ரூபாயை எட்டியுள்ளது.
- இது 2021-22 ஆம் ஆண்டில் பதிவு செய்யப்பட்ட 850.84 கோடி ரூபாயிலிருந்து 17.82 சதவீதம் அதிகமாகும்.

Cargo Handled in MMT

| Berth | 2012-13 | 2013-14 | 2014-15 | 2015-16 | 2016-17 | 2017-18 | 2018-19 | 2019-20 | 2020-21 | 2021-22 | 2022-23 | 2023-24 | 2024-25 (upto Aug 24) |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| CB1 | 8.10 | 9.76 | 11.03 | 11.66 | 10.06 | 10.16 | 9.97 | 8.31 | 6.20 | 7.46 | 7.88 | 9.36 | 4.01 |
| CB2 | 1.78 | 4.31 | 4.1 | 5.34 | 6.30 | 6.55 | 7.40 | 5.80 | 3.49 | 6.06 | 7.65 | 5.53 | 2.34 |
| ECT | 5.05 | 8.42 | 9.22 | 8.61 | 6.74 | 6.46 | 7.67 | 6.15 | 5.55 | 7.96 | 8.71 | 9.30 | 4.17 |
| MLT1 | 1.22 | 2.43 | 3.32 | 3.99 | 4.17 | 4.44 | 4.83 | 4.72 | 4.12 | 4.36 | 4.20 | 4.16 | 1.72 |
| GCB | 1.74 | 2.42 | 2.58 | 2.61 | 2.75 | 2.63 | 2.18 | 2.45 | 1.17 | 1.77 | 1.93 | 1.51 | 0.79 |
| AECT | - | - | - | - | - | 0.05 | 1.10 | 2.52 | 3.87 | 9.27 | 10.62 | 12.96 | 5.68 |
| EBT | - | - | - | - | - | 0.16 | 1.32 | 1.29 | 0.85 | 1.16 | 1.89 | 1.47 | 0.50 |
| LNG | - | - | - | - | - | - | 0.03 | 0.51 | 0.64 | 0.70 | 0.63 | 0.99 | 0.51 |
| Total | 17.89 | 27.34 | 30.25 | 32.21 | 30.02 | 30.45 | 34.50 | 31.75 | 25.89 | 38.74 | 43.51 | 45.28 | 19.72 |

# தேசியச் செய்திகள்

## 17வது மக்களவையில் தனிநபர் உறுப்பினர்களின் மசோதாக்கள்




- 2024 ஆம் ஆண்டு முடிவடைந்த 17வது மக்களவையின் ஐந்தாண்டு காலத்தில், தனிநபர் உறுப்பினர்களின் மசோதாக்களுக்காக 9.08 மணிநேரம் மட்டுமே செலவிடப்பட்டது.

- மாநிலங்களவையானது அதன் செயல்பாட்டுக் காலத்தில் 27.01 மணி நேரம் மட்டுமே அதற்காக செலவிட்டது.
- கீழவை ஆனது சுமார் 16.43 மணிநேரமும், மேலவையானது 20.78 மணிநேரமும் தனி நபர் உறுப்பினர்களின் தீர்மானத்திற்காக செலவிட்டன.
- 18வது மக்களவையின் இரண்டு அமர்வுகளில், 0.15 மணி நேரமும், மாநிலங்கள் அவையின் 0.62 மணிநேரமும், அத்தகைய மசோதாக்களுக்காக செலவிடப்பட்டது.
- கீழவையானது 1.98 மணி நேரமும், மேலவை 2.09 மணி நேரமும் தீர்மானங்களுக்காக செலவிட்டன.
- இது வரை மொத்தம் 14 தனி நபர் மசோதாக்கள் இரண்டு சபைகளிலும் நிறைவேற்றப் பட்டு, ஒப்புதல் வாங்கப் பட்டுள்ளன.
- 1970 ஆம் ஆண்டிற்குப் பிறகு இது வரையில் ஒன்று கூட இரண்டு சபைகளிலும் சேர்த்து நிறைவேற்றப் படவில்லை.

## 2024 மக்களவைத் தேர்தலில் வெளிநாடு வாழ் இந்திய வாக்காளர்கள்




- 2024 ஆம் ஆண்டில் 1,19,374 பேர் வெளிநாடு வாழ் வாக்காளர்களாகப் பதிவு செய்தனர் என்ற நிலையில் கேரளாவில் அதிகபட்சமாக 89,839 பேர் பதிவு செய்தனர்.
- 2019 ஆம் ஆண்டில், 99,844 பேர் வெளிநாடு வாழ் வாக்காளர்களாகப் பதிவு செய்தனர்.
- ஆனால் சுமார் 2,958 வெளிநாடு வாழ் வாக்காளர்கள் மட்டுமே இந்தத் தேர்தலில் பங்கேற்பதற்காக இந்தியாவிற்கு வந்தனர்.
- இவர்களில் 2,670 பேர் கேரளாவைச் சேர்ந்தவர்கள் ஆவர்.
- கர்நாடகா, உத்தரப் பிரதேசம் மற்றும் தமிழ்நாடு போன்ற பல பெரிய மாநிலங்களில் வெளிநாடு வாழ் வாக்காளர்களின் வாக்கு எண்ணிக்கை சுழியாக பதிவானது.
- குஜராத்தில் பதிவான 885 வெளிநாடு வாழ் வாக்காளர்களில் இருவர் மட்டுமே வாக்கு அளித்தனர்.
- மகாராஷ்டிராவில் பதிவான 5,097 NRI வாக்காளர்களில் 17 பேர் மட்டுமே வாக்கு அளித்தனர்.
- ஆந்திரப் பிரதேசத்தில் பதிவு செய்யப்பட்ட 7,927 NRI வாக்காளர்கள் மட்டுமே வாக்கு

அளித்தனர்.

- 2018 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில், தகுதியான வெளிநாடு வாழ் இந்தியர்களுக்கு என்று பதிலாள் முறை வாக்குரிமையை அனுமதிக்கும் மசோதாவை 16வது மக்களவை நிறைவேற்றியது.
- இருப்பினும் இந்த மசோதாவினை தற்போது வரையில் மாநிலங்களவையில் அறிமுகப் படுத்த இயலவில்லை.
- 2020 ஆம் ஆண்டில், இது வரை அரசுப்பணியில் இருக்கும் வாக்காளர்களுக்கு மட்டுமே கிடைக்கப் பெறும் மின்னணு முறையில் அனுப்பப்படும் அஞ்சல் வாக்குச் சீட்டு முறை (ETPBS) வசதியை, தகுதியான வெளிநாடு வாழ் இந்திய வாக்காளர்களுக்கும் சேர்த்து நீட்டிப்பதற்கு தேர்தல் ஆணையம் மத்திய சட்ட அமைச்சகத்திடம் முன்மொழிந்தது.

## PM CARES நிதி 2022-2023

- பிரதான் மந்திரியின் அவசரகாலச் சூழ்நிலைகளில் குடிமக்களுக்கான உதவி மற்றும் நிவாரணம் (PM CARES) நிதியின் தன்னார்வ பங்களிப்பு ஆனது, 2020-21 ஆம் ஆண்டில் 7,184 கோடி ரூபாயாக உயர்ந்து, 2021-22 ஆம் ஆண்டில் சுமார் 1,938 கோடி ரூபாயாகக் குறைந்தது.
- இந்தத் தன்னார்வப் பங்களிப்புகள் ஆனது 2022-23 ஆம் ஆண்டில் 912 கோடியாகக் குறைந்தது.
- இது 2020 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் இந்த நிதி நிறுவப்பட்டதிலிருந்து பதிவான மிகக் குறைவான பங்களிப்பாகும்.
- 2020-21 ஆம் ஆண்டில் மிக அதிகபட்சமாக 495 கோடி ரூபாயாக பதிவு செய்யப்பட்ட வெளிநாட்டுப் பங்களிப்பு ஆனது, அடுத்த இரண்டு ஆண்டுகளில் 40 கோடி ரூபாய் மற்றும் 2.57 கோடி ரூபாயாகக் குறைந்துள்ளது.
- 2022-23 ஆம் ஆண்டில் மொத்தச் செலவினம் சுமார் 439 கோடி ரூபாய் ஆகும், அதில் 346 கோடி ரூபாயானது "PM Cares for Children" திட்டத்திற்காகப் பயன்படுத்தப்பட்டது.

**CONTRIBUTIONS TO THE FUND**

(In Rs crore)

| Year | Voluntary | Foreign |
|---|---|---|
| 2019-20 | 3,076.85 | 0.39 |
| 2020-21 | 7,183.77 | 494.93 |
| 2021-22 | 1,896.76 | 40.12 |
| 2022-23 | 909.64 | 2.57 |
| Total | 13,067.02 | 538.01 |

## தேங்காய் எண்ணெய் குறித்து உச்சநீதிமன்றம்

- உச்ச நீதிமன்றமானது, சிறிய குடுவைகளில் உள்ள தேங்காய் எண்ணெயினை வரி

விதிப்பு நோக்கங்களுக்காக மட்டுமே சமையல் எண்ணெய் என வகைப்படுத்த வேண்டும் என்று தீர்ப்பளித்துள்ளது.

- மேலும், தேங்காய் எண்ணெயைச் சிறியக் குடுவைகளில் அடைத்து, தலைமுடிக்குப் பயன்பாடுகளில் பயன்படுத்தப்படலாம் என்று முத்திரையிடப்பட்டால், அது 1985 ஆம் ஆண்டு மத்திய கலால் வரிச் சட்டத்தின் கீழ் தலைமுடி பயன்பாட்டிற்கான எண்ணெய் என வகைப்படுத்தப்பட வேண்டும் என்றும் நீதிமன்றம் தெளிவுபடுத்தி உயுள்ளது.
- தற்போது, சரக்கு மற்றும் சேவை வரி விதிப்பு முறையின் கீழ், சமையல் எண்ணெய்க்கு 5% வரி விதிக்கப்படுகிறது, அதே நேரத்தில் தலைமுடி பயன்பாட்டிற்கான எண்ணெய் மீது 18% வரி விதிக்கப்படுகிறது.
- சமையல் எண்ணெயாகச் சந்தைப்படுத்தப்படும் தேங்காய் எண்ணெயானது 2006 ஆம் ஆண்டு உணவுப் பாதுகாப்பு மற்றும் தரநிலைச் சட்டத்திற்கு இணங்க வேண்டும், மேலும், சமையல் தர நெகிழி கொள்கலன்களைப் பயன்படுத்த வேண்டும்.



**Is coconut oil an edible oil or a haircare product?**

The SC ends a 15-year debate: Coconut oil is classified as an edible oil (5% GST), not hair oil (18%). Rejecting packaging size and market perception, the court relied on HSN norms and edible oil standards. Justice for coconut oil!


# சர்வதேசச் செய்திகள்

## டென்மார்க் ஜலசந்தி காட்டராக்ட்

- டென்மார்க் ஜலசந்தி காட்டராக்ட் என்பது 11,500 அடி செங்குத்து உயரத்துடன் பூமியின் மிகப்பெரிய நீர்வீழ்ச்சி என்று அறிவிக்கப்பட்டுள்ளது.
- இது நிலத்தில் உள்ள மிக உயரமான நீர்வீழ்ச்சியான ஏஞ்சல் நீர்வீழ்ச்சியை விட மூன்று மடங்கு உயரமாகும்.
- இந்த மாபெரும் நீர்வீழ்ச்சியானது, நீருக்கடியில் சுமார் 300 மைல்கள் (480 கிலோமீட்டர்) அகலத்தில் பரவியுள்ளது.
- இது கிரீன்லாந்துக்கும் ஐஸ்லாந்திற்கும் இடையே ஆர்க்டிக் கடலுக்கு வெகு அடியில்

மறைந்துள்ளது.

- இந்த காட்டராக்ட் நீர்வீழ்ச்சியின் உருவாக்கமானது 17,500 முதல் 11,500 ஆண்டுகளுக்கு முந்தையப் பனி யுகத்திற்கு முந்தையதாகும்.




# அறிவியல் மற்றும் தொழில்நுட்பம்


## இஸ்ரோவின் SpaDeX திட்டம்




- PSLV-C60 ஏவுகலத்தினை வெற்றிகரமாக விண்ணில் செலுத்தியதன் மூலம் இஸ்ரோ மற்றொரு மைல்கல்லை எட்டியுள்ளது.
- இது முன்னோடி மிக்க விண்கல இணைப்பு பரிசோதனை கலத்தினை (SpaDeX) சுமந்து செல்கிறது.
- இந்த கலமானது SDX01 (சரிபார்ப்பு கலம்) மற்றும் SDX02 (இலக்கு கலம்) என்ற இரண்டு விண்கலங்களை நிலை நிறுத்தியுள்ளது.
- இரண்டு சிறிய விண்கலங்களைப் பயன்படுத்தி விண்வெளி விண்கல இணைப்புத் துறையில் இந்தியாவின் திறன்களை மேம்படுத்தி நிரூபிப்பதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.

- வெற்றிகரமான விண்கல இணைப்பு மற்றும் நிலை நிறுத்தலுக்குப் பிறகு, இரண்டு செயற்கைக் கோள்களுக்கு இடையேயான மின் ஆற்றல் பரிமாற்றம் மேற் கொள்ளப் படும்.
- இந்த இரண்டு செயற்கைக் கோள்களின் இணைப்புத் துண்டிக்கப்பட்டு பிரிக்கப்பட்ட பிறகு, இரண்டு ஆண்டுகள் வரை நிர்ணயிக்கப்பட்டுள்ள அவற்றின் செயல்பாட்டுச் சுழற்சிக்காக அந்தந்த கலங்களின் செயல்பாட்டினைத் தொடங்கும்.
- இந்தியாவின் சொந்த விண்வெளி நிலையமான 'பாரதிய அந்தரிக்ஸ் நிலையம்' (BAS) அமைப்பதற்கான இஸ்ரோவின் நோக்கத்திற்கு PSLV-C60 கலத்தின் இந்த ஏவுதல் மிக முக்கியமானதாகும்.

## நோவாவிலிருந்து FUV உமிழ்வுகள்





- இந்திய வானியற்பியல் கழகத்தின் (IIA) வானியலாளர்கள், அண்மையில் இருக்கும் ஆண்ட்ரோமேடா அண்டத்தில் உள்ள நோவாவிலிருந்து முதன்முறையாக தொலைதூர புற ஊதா (FUV) உமிழ்வினைச் சமீபத்தில் கண்டறிந்துள்ளனர்.
- நோவா என்பது பல வாரங்கள் அல்லது மாதங்களில் மிக மெதுவாக மங்குகின்ற ஒரு பிரகாசமான, நன்கு வெளிப்படையாக புதிதாக உருவாகின்ற நட்சத்திரத்தின் திடீர் தோற்றத்தை ஏற்படுத்துகின்ற ஒரு நிலையற்ற வானியல் நிகழ்வாகும்.
- FUV என்பது 200 முதல் 280 நானோ மீட்டர் வரையிலான அலைநீளங்களைக் கொண்ட புற ஊதா கதிர்வீச்சின் அலை அலைவரிசையைக் குறிக்கும் ஒரு கதிர்வீச்சு ஆகும்.

## கிரோன்ஸ் நோய்க்கான புதிய சிகிச்சை


- உலகளவில் சுமார் 10 மில்லியன் மக்கள் குடல் அழற்சி நோயுடன் (IBD) வாழ்கின்றனர், இதில் அல்சரேட்டிவ் பெருங்குடல் அழற்சி மற்றும் கிரோன்ஸ் நோய் ஆகியவை அடங்கும்.
- மிரிக்கிசுமாப் என்பது அல்சரேட்டிவ் பெருங்குடல் அழற்சியின் சிகிச்சைக்காக உணவு மற்றும் மருந்து நிர்வாக அமைப்பினால் (FDA) தற்போது அங்கீகரிக்கப்பட்ட ஒரு மருந்து ஆகும்.
- அல்சரேட்டிவ் பெருங்குடல் அழற்சிக்கு மட்டுமின்றி, கிரோன்ஸ் நோய்க்கும் சேர்த்து மிரிக்கிசுமாப் மருந்து நீண்டகால செயல்திறன் மற்றும் பாதுகாப்பு கொண்டுள்ளதாக என்று ஆராய்ச்சியாளர்கள் வெளிப்படுத்தியுள்ளனர்.

- அல்சரேட்டிவ் பெருங்குடல் அழற்சி மற்றும் கிரோன்ஸ் நோயினால் ஏற்படும் அழற்சி மோசமான அறிகுறிகளுக்கு வழி வகுக்கும்.




# சுற்றுச்சூழல் செய்திகள்

## 2வது மீன்பிடிப் பூனைக் கணக்கெடுப்பு




- இந்தியாவின் இரண்டாவது மிகப் பெரியச் சதுப்பு நிலமான ஆந்திரப் பிரதேசத்தின் கோரிங்கா வனவிலங்கு சரணாலயத்தில் (CWS) அருகி வரும் மீன்பிடிப் பூனை (பிரியோ நைலுரஸ் விவேரிநஸ்) காணப்படுகிறது.
- மீன்பிடிப் பூனைகளின் முதன்முதல் கணக்கெடுப்பின் படி, 2018 ஆம் ஆண்டில், மீன்பிடி பூனைகளின் எண்ணிக்கை 115 ஆக இருந்தது.
- மீன்பிடிப் பூனையின் இரண்டாவது கணக்கெடுப்பு ஆனது இன்னும் சில வாரங்களில்


முடிவடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

- நடந்து வரும் மீன்பிடிப் பூனைக் கணக்கெடுப்பு ஆனது இந்தியாவின் முதல் மீன்பிடிப் பூனைகளுக்கான கழுத்துப் பட்டை அணிதல் திட்டத்தின் ஒரு பகுதியாகும்.
- இந்தியா-டேஹ்ராடூன் வனவிலங்கு நிறுவனம் ஆனது கழுத்துப் பட்டை அணிவித்தல் திட்டத்தைச் செயல்படுத்தி வருகிறது.

# மாநிலச் செய்திகள்

## வயநாடு நிலச்சரிவு 2024

- அனைத்து நடைமுறை நோக்கங்களுக்காகவும் வேண்டி வயநாடு நிலச்சரிவினை ‘கடுமையான இயற்கைப்’ பேரழிவாக மத்திய அரசு அறிவித்துள்ளது.
- இருப்பினும், இதனால் மாநிலத்திற்கான சிறப்பு நிதி எதுவும் அறிவிக்கப்படவில்லை.
- இந்த வகைப்பாடானது, மறுவாழ்வு முயற்சிகளுக்குப் பாராளுமன்ற உறுப்பினர்களின் உள்ளாட்சிப் பகுதி மேம்பாட்டு நிதி உள்ளிட்ட நிதியை மாநிலத்திற்கு வழங்க உதவும்.




# பிரபலமானவர்கள், விருதுகள் மற்றும் நிகழ்வுகள்

## 39வது அமெரிக்க அதிபர் ஜிம்மி கார்ட்டர்

- அமெரிக்காவின் 39வது அதிபரான ஜனநாயகக் கட்சியினைச் சேர்ந்த ஜிம்மி கார்ட்டர் காலமானார்.
- அவர் 1977 முதல் 1981 ஆம் ஆண்டு வரை அதிபராகப் பணியாற்றினார்.


- உலகம் முழுவதும் அவர் ஆற்றிய மனித உரிமைப் பணிகளுக்காக அவருக்கு 2002 ஆம் ஆண்டில் அமைதிக்கான நோபல் பரிசு வழங்கப்பட்டது.
- கார்ட்டர் தனது 100வது பிறந்தநாளை எட்டிய முதல் அமெரிக்க அதிபர் ஆவார்.




## இதரச் செய்திகள்

### PoK பகுதியின் கில்கிட்டில் சமஸ்கிருத கல்வெட்டு

- பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீரில் உள்ள கில்கிட் பகுதிக்கு வெளியே உள்ள ஒரு பாறையில் சமஸ்கிருத கல்வெட்டு ஒன்றை இந்தியத் தொல்லியல் துறை கண்டறிந்து உள்ளது.
- இது பிராமி எழுத்தில் எழுதப்பட்டுள்ளது; இது தோராயமாக கி.பி. 4ஆம் நூற்றாண்டைச் சேர்ந்ததாகக் கூறப்படுகிறது.
- பாகிஸ்தானில் சமஸ்கிருதக் கல்வெட்டுகள் கண்டெடுக்கப்பட்ட சம்பவங்கள் இதற்கு முன்பும் பதிவாகியுள்ளன.



★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★